**இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் - 2013**

இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 32(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2014 யூன் 18 ஆந் திகதி நிறுவகத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும்

காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்யபட்ட புத்தகப் பெறுமதி பூச்சியமாக உள்ள ரூபா 12,107,898 பெறுமதியான நிலையான சொத்துக்களின் நியாயமான பெறுமதி புத்தகங்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் நிறுவகத்திற்கு எதிராக விசாரணை செய்யப்பட்டு வரும் வழக்கு தொடர்பாக ஏற்டக்கூடிய நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பாக தேவையான சீராக்கங்கங்களோ அல்லது வெளிப்படுத்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 399,000 பெறுமதியான இரத்தினக்கல் இருப்பொன்று நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் நுகர்வுப்பொருள் இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய பணிக்கொடை நிதிய வைப்புக் கணக்கின் மீதி ரூபா 1,604,602 ஆக இருந்த போதிலும், எதிர்வரும் ஆண்டின் இரண்டு மாத வைப்புக்கள் மற்றும் அதற்குரிய வட்டியான ரூபா 164,982 தொகையை அம்மீதியுடன் சேர்க்கப்பட்டிருந்தமையால் அக்கணக்கின் மீதி ரூபா 164,982 ஆல் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) திறைசேரியிடமிருந்து மானியமாக நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 21,200,000 பெறுமதியான 3 வாகனங்கள் நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த போதும் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

நிதிக்கூற்றுக்களில் கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களிற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகளின்மை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

| உருப்படிகள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) வெளியார் மதியுரைக் கட்டணங்கள் | 460,232 | கடமைப் பொறுப்பளித்தல் பதிவேடு மற்றும் மாணவர்களின் வருகைப் பதிவேடு |
| (ஆ) நுகர்வுப்பொருள் இருப்புக்கள் | 1,256,264 | இருப்பு பதிவேடு |
| (இ) பதிவழிக்கப்பட்ட நுகர்வுப் பொருள் இருப்புக்கள் | 648,000 | இருப்பு பதிவேடு |
| (ஈ) கட்டிடங்களுக்கான வாடகை கொடுப்பனவு | 900,000 | வாடகை உடன்படிக்கை |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 25(6) பிரிவு | இரத்தினக்கல் கைத்தொழிலுக்குரிய நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபடும் பல்கலைக்கழகமொன்றின் அல்லது ஆராய்ச்சி நிறுவனமொன்றின் முகவர் ஒருவர் நிறுவகத்தின் |

பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ /12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | |
|---|---|
| (i) 4.2.2 ஆம் பந்தி | நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் நோக்கங்கள் தொடர்பில் அடைவுகள் எவ்வளவு என்பது தொடர்பாக செயற்பாட்டு மதிப்பீட்டிற்காக நிர்வாக அதிகாரியால் மாதாந்தம் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக 6 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. |
| (ii) 5.1.2 ஆம் பந்தி | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செயற்பாட்டிற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. |
| (iii) 5.1.3 ஆம் பந்தி | ஆண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய திறைசேரி நிதிஏற்பாடுகளிலிருந்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்த ரூபா 12,245,839 தொகை திறைசேரி அங்கீகாரமின்றி பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தின் ஊழியர்களுக்காக 2012 ஆம் ஆண்டில் சேமிக்கப்பட்ட விடுமுறைக்காக ரூபா 901,150 தொகையான படிகள் திறைசேரியின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையில் காணப்படாத போக்குவரத்து உத்தியோகத்தர் பதவியில் கடமை மேவுகை செய்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமொன்று இல்லாமல் கட்டுப்பாட்டு அதிகாரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாதாந்தம் ரூபா 1,500 வீதம் 2007 ஏப்ரல் முதல் 2013 திசெம்பர் வரை ரூபா 121,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,117,229 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 207,392 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 909,837 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைச் செலவினம் ரூபா 3,628,890 ஆலும் பராமரிப்புச் செலவினம் ரூபா 642,901 ஆலும் அதிகரித்தமை மற்றும் பயிற்சி பாடநெறி கட்டண வருமானம் ரூபா 1,279,144 ஆல் குறைவடைந்தமை என்பன இவ்வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 3.2 இலாப நிலைமை

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளுக்குரிய நிறுவகத்தின் நிதிச் செயலாற்றல் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வருமானம் - அரச பங்களிப்பு | 45,133,065 | 43,481,200 | 39,919,040 | 34,207,079 | 30,650,891 |
| நிறுவகத்தின் வருமானம் | 4,462,639 | 5,931,354 | 3,696,415 | 2,745,498 | 2,898,980 |
| | 49,595,704 | 49,412,554 | 43,615,455 | 36,952,577 | 33,549,871 |
| செலவினம் | 50,712,933 | 49,619,946 | 43,232,376 | 37,731,537 | 32,905,323 |
| மிகை(பற்றாக்குறை) | (1,117,229) | (207,392) | 383,079 | (778,960) | 644,548 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் நான்கு ஆண்டு காலப்பகுதிக்குள் 273 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் செலவினங்களுக்காக அரசின் பங்களிப்பாக ரூபா 45.1 மில்லியன் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் ஆண்டின் மொத்தச் செலவினம் ரூபா 50.7 மில்லியனாக இருந்தது. இதன் பிரகாரம் நிறுவகத்தின் மொத்த செலவில் 89 சதவீதம் அரச மானியங்களால் ஈடுசெய்யப்பட்டிருந்தன.

## 3.3 நிறுவகத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

அறிவிக்காமல் சேவைக்கு சமூகமளிக்காமை காரணமாக சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த நிறுவகத்தின் ஊழியர் ஒருவரால் நிறுவகத்திற்கு எதிராக தொழில் நியாய சபையில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை நான்கு ஆண்டு காலப்பகுதியில் இரத்தினக்கல் படிவு ஆய்வு மற்றும் மதிப்பீடு செய்யும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தும் வகையில் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அக்காலப்பகுதியில் செயற்திட்டம் நிறைவு செய்யப்படாமல் இருந்ததுடன், செயற்திட்டக் காலமும் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் ஒரு வருடத்தில் இரண்டு மாகாணங்களில் ஆய்வு நடவடிக்கைகளை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2007 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை மொனறாகலை மாவட்டத்தின் புத்தள மற்றும் வெள்ளவாய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் மாத்திரம் மேவுகை செய்யப்பட்டிருந்தன. இதற்காக வருடாந்த நிதிஏற்பாட்டில் 37 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் மார்ச் மாதத்திலிருந்து யூலை மாதம் வரை வெளிக்கள பரிசோதனை மேற்கொண்டு சுற்றாடல் சார்ந்த இரத்தினக்கல் அகழ்வு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அகழ்வு மேற்கொள்ள வேண்டிய முறைமைகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், இம்முறைமை தொடர்பாக உரிய தரப்பினரை அறிவூட்டுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பயிற்சியளித்தல் செயற்பாடுகள் அபிவிருத்தி / மேம்படுத்தல்

i. நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ஆறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிய பயிற்சி நிலையமொன்றை ஆரம்பிக்கும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மனித வள அபிவிருத்திக்கு செலவு செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5.2 மில்லியன் உரிய செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருக்கவில்லை.

ii. முன்னைய ஆண்டின் போது அழகு ஆபரணங்கள் உற்பத்தி, ஆபரணங்களுக்காக கல் பதித்தல் என்பவற்றிற்காக முறையே மாணவர்கள் 24 மற்றும் 9 பேர் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அப்பாடநெறிகளுக்காக எந்தவொரு மாணவரும் பதிவு செய்திருக்கவில்லை.

iii. மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டிலேயே பூர்த்தி செய்யப்பட்டிருந்த பாடநெறிகளுக்கு பதிவு செய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 324 ஆக இருந்த போதிலும்,

அப்பாடநெறிகளை வெற்றிகரமாக 231 மாணவர்கள் மாத்திரம் பூர்த்தி செய்திருந்தனர். அது பதிவு செய்யப்பட்ட மாணவர்களில் 71 சதவீதமாக இருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிரேஷ்ட முகாமையாளர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,395,749 தொகையான தங்கம் வெள்ளி மோசடிகளுக்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 1,495,745 தொகை மற்றும் அந்த உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 56,250 வாகனக் கடன் அதற்குரிய வட்டி என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் குறித்த உத்தியோகத்தர் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்

(ஆ) நிறுவனத்திற்கு தாபன நடைமுறைக் கோவையொன்றை தயாரிப்பதற்காக 2012 யூன் 12 ஆம் திகதி ரூபா 634,000 தொகைக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்துடன் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அச்செயற்பாடு 3 மாதங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், தாமதமாகும் ஒவ்வொரு நாளைக்கும் ரூபா 500 வீதம் தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்காக உடன்படிக்கை மேற்கொள்வதற்கு முன்னர் அல்லது 2012 மே 31 ஆம் திகதி 50 சதவீத முற்பணமான ரூபா 317,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 யூன் வரையிலும் அச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு நிறுவகம் தவறியிருந்தது.

**4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 யூலை 4 ஆந் திகதி ரூபா 10,977,344 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த அதி தொழில்நுட்பம் வாய்ந்த மின் அடுப்பு 2014 யூன் வரையில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நாள்தோறும் தேசிய கீதத்தை ஒலிபரப்புவதற்காகவும் பிரதான கூட்டத்தை மேவுகை செய்யும் பொருட்டும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 104,000 பெறுமதியான ஒலிபெருக்கித் தொகுதி 2014 யூன் வரையில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 12,309,013 கிரயத்தில் நிலத்தை துளையிடும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த இயந்திரத்தை சேவை செய்தலுக்காக ரூபா 15,270 தொகையும் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை காப்புறுதியினைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 564,888 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டிலும் பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், முன்னைய ஆண்டுகளிலும் இயந்திரத்தின் நிர்ணயிக்கப்பட்ட இயலளவைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைமை அலுவலகத்திற்காக கட்டிடமொன்றை வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்காக மாதாந்த வாடகை ரூபா 600,000 தொகையான ஆகக்குறைந்த கேள்வி பின்னர் ரூபா 700,000 என மாற்றம் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மாதாந்த வாடகை ரூபா 727,488 தொகையான இரண்டாவது கேள்வி படிவத்தின் வாடகை ரூபா 700,000 இற்கு குறைக்கப்பட்டு நிறுவகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு வாடகைக்குப் பெற்றுக்கொண்ட கட்டிடம் உரிய விபரக் குறிப்புக்களுக்கு இணங்காமல் இருந்ததுடன், மின் இணைப்பில் உள்ள குறைபாடு காரணமாக பல ஆராய்ச்சி உபகரணங்கள், குளிரூட்டி இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பவற்றை இயக்கும் போது எந்நேரமும் மின்சாரம் துண்டிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிறுவகத்தினால் ஊழியர் கடனுக்காக அறவிடப்படுகின்ற வட்டியிலிருந்து ஊழியர் கடன்வழங்கலுக்காக வேறான நிதியக் கணக்கிற்கு ரூபா 819,000 செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அந்நிதியம் பயன்படுத்தப்படாமல் அரச மானியங்களிலிருந்து ரூபா 194,566 தொகை கடன் வழங்கப்பட்டிருந்தது.

(இ) முன்னால் செயற்பாட்டு பணிப்பாளரால் அப்போது தலைவராக இருந்தவருக்கு (தனிப்பட்ட பெயருக்கு) எதிராக மனித உரிமை மீறல் போன்ற காரணம் அடிப்படையில் கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் ரூபா 5,000,000 தொகை இழப்பீடு கோரி வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. வழக்கு உத்தியோகபூர்வ வழக்கொன்றாக அல்லாத போதும், அதற்காக நிறுவகத்தால் சட்ட செலவினமாக ரூபா 219,600 செலவிடப்பட்டிருந்தது.

**4.5 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) பல்கலைக்கழகமொன்றில் முழுநேர விரிவுரையாளராக சேவை புரிந்த உத்தியோகத்தர் ஒருவர் இரத்தினக்கல் படிவுகளை ஆய்வுசெய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் செயற்திட்டத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் முழு நேர மதியுரையாளராக சேர்க்கப்பட்டு மாதாந்தம் ரூபா 85,000 வீதம் 2011 ஏப்ரல் முதல் 2013 திசெம்பர் வரை ரூபா 2,805,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், இதற்கு மேலதிகமாக வீட்டிலிருந்து கடமை நிலையத்திற்கு போக்குவரத்து வசதிகளும் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) இரத்தின விஞ்ஞானம் மற்றும் இரத்தினக்கல் பட்டைதீட்டுதல் என்பவற்றுடன் அண்மித்த ஒரு நாள் செயலமர்வுக்கு இணையாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்த வெளிக்கள சுற்றுலாவொன்றிற்கு போக்குவரத்துக் கட்டணமாக ரூபா 25,060 தொகையும் உபசாரச் செலவினத்திற்காக ரூபா 20,000 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான வெளிக்கள சுற்றுலாவொன்று மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்படவில்லை.

**4.6 செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்**

2007 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை இரத்தினக்கல் படிவுகள் ஆராய்ச்சி மற்றும் மதிப்பீடு செய்தல் செயற்திட்டத்திற்காக ரூபா 11,393,846 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதில் 57 சதவீதம் சம்பளம் மற்றும் மேலதிக நேரத்திற்காகவும் 18 சதவீதம் எரிபொருள் வீட்டு வாடகை மற்றும் ஏனைய செலவினங்களுக்காகவும் செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மொத்த செலவினத்தில் 25 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், 2011 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த இச்செயற்திட்டம் 2014 யூலை வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.7 பதவியணியினர் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிறுவகத்தின் ஒவ்வொரு முகாமை மட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 133

ஆக இருந்த போதிலும், உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை 48 ஆக இருந்தது. இதன் பிரகாரம் வெற்றிடங்களான பதவிகளின் எண்ணிக்கை 85 ஆக இருந்ததுடன் அப்பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு உரியகாலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்காக பரீட்சைகளை நடாத்தும் போது எழுத்துப் பரீட்சைக்கான வினாப்பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் விடைத்தாள்களைப் பரீட்சித்தல் நிறுவகத்தின் உத்தியோகத்தர்களாலேயே மேற்கொள்ளப்படுவதால் சுயாதீன ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றமை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படாமல் இருந்ததுடன், ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் எழுத்துப் பரீட்சையின் போது ஒரு வினாப்பத்திரத்திற்கு 40 சதவீதத்திற்கு மேலாகவும் சராசரி 50 சதவீதத்திற்கு மேற்பட வேண்டிய போதிலும், ஆட்சேர்ப்பின் போது அதன் பிரகாரம் தெரிவுசெய்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய நிறுவகத்தில் தற்போது காணப்படும் வளங்கள், கடந்த மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகளின் செயன்முன்னேற்றம், கூட்டிணைந்த திட்டத்தின் அந்த அந்த செயற்பாடுகளுக்காக பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை இனங்காணல் மற்றும் ஒவ்வொரு ஆண்டினதும் இலக்குகளை காண்பித்தல் (Performance Indicators) போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான தகவல்களுக்கும் இடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 4.5 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட சம்பள தொகுதியின் பிரகாரம் சிரேஷ்ட முகாமையாளர் பதவிக்குரிய சம்பள தொகுதி எச்எம் 2-1 இல் வைக்கப்பட வேண்டிய போதிலும், 2009 மே 01 ஆம் திகதி முதல் பணிப்பார் நாயகம் எச்எம் 2-3 சம்பளத் தொகுதியில் ஆகக்கூடிய சம்பளப் படி நிலையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமொன்று இல்லாமல் வைத்தமையால் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 617,400 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. இத்தொகையை உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவி உயர்வு வழங்கும் போது முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் வகித்த 4 பேருக்கு அந்த உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்டிருந்த சம்பளத் தொகுதியின் சில சம்பள படிநிலைகளுக்கு முன் சம்பளம் வைக்கப்பட்டமையால் அந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 806,700 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக கூடிய சம்பள அளவில் வைக்கப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்கள் வேறு நிறுவனங்களுக்கு இட மாற்றம் பெற்றுச் சென்றிருந்தனர்.

(இ) பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக 2011 இன் 119 ஆம் இலக்க பாராளுமன்ற வெளியீட்டின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தின் முறையற்ற சம்பள அதிகரிப்பு தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட சம்பளத்தை சரி செய்து தற்போது காணப்பட்ட சம்பள நிலையில் மீள வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கொள்வனவு
(இ) ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
(ஈ) சம்பளக் கொடுப்பனவு
(உ) பாடநெறிகளை நடாத்துதல்
(ஊ) பொருள் மெய்மையாய்வு
(எ) செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்